[1972 சனவரி 31

கூட்டுறவு நூற்பாலைகளின் தொழிற்சங்கங்கள்

*182 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நூற்பு ஆலைகளின் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதில் ரகசிய வாக்கெடுப்பு முறையைப் பின்பற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சங்க அங்கீகாரம் சம்பந்தமாக ஏதாவது மசோதா அரசு கொண்டு வருவதற்கு ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, கூட்டுறவுத் நூற்பு ஆலைகளின் தொழிலாளர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்குவதில் இரகசிய வாக்கெடுப்பு முறையைப் பின்பற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை. எனினும், 15-4-1971-இல் முதல் அமைச்சர் முன்பு நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து, தொழிற்சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கும் காரியத்திற்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையைச் சரிபார்க்கும் நடைமுறை தொடர்பான பொருள்குறித்து அமைச்சரவை ஆய்வு செய்தது. ஒழுங்குமுறை விதிக் கோவையின்கீழ் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்க, தொழிற் சங்கப் பதிவேடுகளைச் சரிபார்ப்பதன்மூலம் நிச்சயித்தறிந்துள்ளபடி, உயர்ந்த அளவு உறுப்பினர்களை உடைய தொழிற் சங்கத்துக்கு தொடர்ந்து ஏற்பளிப்பு வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, கோவையிலே அனைத்துத் தொழிற்சங்கங்களும் சேர்ந்து 10 அம்ச திட்டம் ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்களா? அதை அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, அதைப்பற்றி விவரம் ஒன்றுமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், ஒரு சங்கம் அரசாங்கத்திலே விதிகளின் படி பதிவு செய்யப்பட்டபிறகு அதை அந்தந்தத் தொழிற்சாலையிலே இருக்கும் மேனேஜ்மெண்ட்கள் அங்கீகரிக்காமல் இருப்பது என்பது பல நாட்களாகப் பலவிடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருந்து, அதிலே அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்றால், அதை அங்கீகரிக்கும்படி மேனேஜ்மெண்ட்களைக் கட்டாயப்படுத்தும் முறையில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திட்டவட்டமாக இந்தந்த இடங்களில் இப்படிச் செய்யப்படுகிறது என்று தெரிவிப்பார்களானால், அரசு அதைப் பரிசீலனை செய்யும்.